ARCHBISHOP OF KUALA LUMPUR
(USKUP AGUNG KUALA LUMPUR)

528, Jalan Bukit Nanas, 50250 Kuala Lumpur, Malaysia
Tel: 603-2078 8828/ 2078 5089/ 2072 6606 I Fax: 603-2031 3815
archbishop@archkl.org I www.archkl.org

17 மார்ச் 2020

# பொது நடமாட்டக் கட்டுபாடு ஆணையின் கீழ் கோலாலம்பூர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி கவனிப்பு

அன்புள்ள சகோதர திருப்பணியாளர்களே, துறவற மற்றும் பொதுநிலையினரே, நீங்கள் அறிந்துள்ளதைப்போல், நமது நாடு தொற்று நோய்களைத் தடுக்கும், கட்டுப்படுத்தும் சட்டம் 1988, மற்றும் காவல்துறை சட்டம் 1965-ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை (MCO)) வரும் மார்ச் 18 முதல் 2020 மார்ச் 31 வரை (கட்டுப்பாடு காலம்) அமுலாக்கம் செய்துள்ளது.

பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (Movement Control Order) விதித்துள்ள நடமாட்டம் மற்றும் செயல்பாடுகளின் கூடுதல் கட்டுப்பாடுகளின் கீழ், விசுவாசிகளுக்கான ஆயர் கண்காணிப்பு தடைபடவோ அல்லது தேவையின்றி தடைசெய்யப்படவோ கூடாது என்பதை உறுதிப்படுத்த மேற்கண்ட உத்தரவுக்கு இணங்க மேலும் உத்தரவுகளைப் பிறப்பிக்க முடிவு செய்துள்ளேன்.

இந்த கூடுதல் நடவடிக்கைகள் 2020, மார்ச் 18 தொடங்கி நடைமுறைக்கு வருவதோடு, இந்தக் கட்டுப்பாட்டுக் காலத்தின் இறுதியை நெருங்கும்போது எனது இந்த உத்தரவுகள் மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும்:

a) அனைத்துப் பொது வார இறுதி மற்றும் வார நாட்களின் திருப்பலிகள், கூட்டங்கள், ஒன்றுகூடல்கள், மறைக்கல்வி வகுப்புகள் மற்றும் முதியோருக்கான கிறிஸ்தவப் புகுமுக சடங்குமுறை (ஆர்.சி.ஐ.ஏ) அமர்வுகள் கடந்த 2020 மார்ச் 12, தேதியிட்ட தீபகற்ப மலேசியாவின் மூன்று பேராயர்/ ஆயர்கள் மடலில் கண்டுள்ளப்படி முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டவை 2020 மார்ச் 31 வரை நடைமுறையில் இருக்கும்.

b) விதிக்கப்பட்டுள்ள பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக்கு (MCO) இணங்க அனைத்து தேவாலயங்களும் சிற்றாலயங்களும் மூடப்பட்டிருக்கும்.

c) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பொது திருப்பலிகளை நீங்கள் உங்கள் இல்லங்களிலிருந்து செப உணர்வோடு பின்பற்றலாம். மேலும் இந்த காலகட்டத்தில் ஆன்மீக ரீதியில் ஒன்றிப்பில் இணைந்திருக்க நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்.

d) அனைத்து திருப்பணியாளர்களும் தங்கள் தனிப்பட்டத் திருப்பலிகளை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

e) இந்த நடமாட்டக் கட்டுப்பாட்டுக் காலத்தில் பேராயரின் மற்றும் பங்குகளின் அலுவலகங்கள் பொதுமக்களுக்கு மூடப்பட்டிருக்கும். ஆனால் கவனிப்பு மற்றும் ஆதரவு தேவைப்படும் அவசர வேளைகளில் தொடர்பு கொள்ள பங்குகள் அவசர வேளை தொடர்பு எண்களை (Hotlines) பங்குகளில் ஏற்பாடு செய்ய வேண்டும். பேராயர் மற்றும் பங்கு அலுவலகப் பணியாளர்கள் இல்லங்களிலிருந்து வேலை செய்ய வேண்டும்.

f) ஒப்புரவு, நோயிற்பூசுதல் மற்றும் நற்கருணை ஆகியவை ஆபத்து அவசர பிரத்தியேகத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். தயவுசெய்து பங்கு அவசர தொடர்பு எண்ணுடன் தொடர்பு கொண்டு விவரங்களை வழங்கவும். இல்லங்களில் மிகக் கடுமையாக **நோய்வாய்ப்பட்டிராத** நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குவது கட்டுப்பாட்டுக் கால முடிவு வரை (மார்ச் 31) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

g) இந்த கட்டுப்பாட்டுக் காலத்திலோ, அடுத்து வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களிலோ திருமணம் செய்ய திட்டமிட்டுள்ள தம்பதியினர், பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் (MCO) விதிகளுக்கு இணங்க உங்கள் திருமண ஏற்பாடுகளைப் பற்றி கலந்தாலோசிக்க உங்கள் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

h) இறப்பு சடங்கு ஏற்பாடுகள் மற்றும் பங்குகளிலுள்ள இறப்புக் கூடம் (Funeral parlour) பயன்படுத்துதல் பற்றிய தேவைகளுக்குச் சுகாதார அமைச்சகம் மற்றும் பங்கு பொறுப்பதிகாரிகள் வழங்கியுள்ள வழிகாட்டிகளுக்கும் விதிமுறைகளுக்கும் கண்டிப்பாக இணங்க வேண்டும். மேல் விபரங்களுக்குப் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

(i)அனைத்து அ.தி.ச. களும் அவற்றின் கூட்டு வளங்களை (resources) அந்தந்த பங்கு இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட மனித வளர்ச்சி பணிக் குழுவுடன் இணைந்து, இந்த நெருக்கிடியால் பாதிக்கப்படக் கூடியவர்கள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், தனித்திருப் பவர்கள், இந்த நெருக்கடியால் பொருளாநதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆகியோரின் தேவைகளைக் கவனிப்ப தற்கும் ஆதரவு வழங்குவதற்கும் மேலும், இந்த தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் முன்னணியில் இருக்கும் சுகாதாரப் பாதுகாப்பு பணியாளர்களுடனும் அவர்கள் குடும்ப உறுப்பினர் களுடனும் பகிர்ந்து கொள்ள நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

j) ஆர்.சி.ஐ.ஏ -இன் கீழ் கொண்டாடப்படவுள்ள ஆய்வுகள் மற்றும் தயாரிப்புகள் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

k) *2020* மார்ச் *31* ஆம் தேதி திட்டமிடப்பட்ட திருத்தைலத் திருப்பலி ரத்து செய்யப்படும். வேறொரு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை தீர்மானிக்க சூழ்நிலையை ஆய்வு செய்வோம். புனித வார கொண்டாட்டங்கள், பாஸ்கா மறைநிகழ்வுகள் (புகுமுகச் சடங்குகள்) கொண்டாட்டம் தொடர்பான யாவும் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியின் முன்னேற்றம் மற்றும் அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வரும் மேல் வழிகாட்டிகளைப் பொறுத்து அமையும்.

சமூக-ஒடுக்கக் காலத்தில் நாம் ஒருவருக்கொருவர் உடல் ரீதியாகப் பிரிந்திருந்தாலும், நம்முடைய ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவில் நாம் நெருக்கமாக ஒன்றித்திருக்கிறோம். புனித பவுல் அடிகளார் நமக்கு நினைவூட்டுவது போல், "சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்பும் நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது" என்பது எனது உறுதியான நம்பிக்கை. (உரோ *8: 38-39*)

உங்களது அன்புள்ள



மேதகு பேராயர் ஜூலியன் லியாவ்,
கோலாலம்பூர் மாமறைமாட்டம்